Judicial Form No.53
(See Rule 43)
DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**M.C.01/2024**

**2025-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 22- ம் நாள் செவ்வாய்கிழமை குற்றம் முறையிடுபவரின் ம.சா. 1 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு.சரவணன் இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ம.சா. | - | 1 | தொழில் | - | பகுதிநேரவேலையாக கண்ணன் ஏஜென்சி கடையில் வேலை பார்க்கிறேன். |
| பெயர் | - | சிந்து | வட்டம் | - | வால்பாறை |
| க/பெ | - | பிரபு | சமயம் | - | |
| கிராமம் | - | அண்ணாநகர் | வயது | - | 29/2025 |
| சாதி | - | | | | |

**<u>28-04-2025</u>**

**<u>(எதிர்மனுதாரர் ஆஜர் )</u>**

**<u>மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி</u>**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் Bcom C.A. முடித்து Mcom C.A.முதலாம் ஆண்டு படித்து வருகிறேன். தமிழ் எழுத படிக்க நன்குதெரியும் என்றால் தெரியும். எனது மூத்த மகளின் பெயர் என்ன என்றால் காவியாஸ்ரீ. மனுவின் குறுந்தலைப்பு மற்றும் நெடுந்தலைப்பில் காவ்யாஸ்ரீ என உள்ளது என்றால் சரிதான். எழுத்துப்பிழைகளை நான் படித்துப்பார்த்து கையொப்பம் செய்தேன் என்றால் ஆமாம். இந்த இருபெயரும் ஒருவருக்கே என்று சான்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மனுவில் மனுதாரர் பட்சம் சமர்ப்பிக்கும் மனு என்று ஒருமையில் உள்ளது என்றால் சரிதான். மனுவில் முதல் பக்கத்தில் வால்பாறை -38 புதுமார்க்கெட் இருக்கும் வழக்குரைஞர் சி.மா.சிவசுப்பிரமணியம் பிஏபிஎல் அனுப்பும் வக்கீல் நோட்டீஸ் என்னவென்றால் என உள்ளது என்றால் சரிதான். மனுவில் இவ்வாறு குறிப்பிடப்பட்டது தவறு என்றால் அது தவறுதலாக ஏற்பட்டதாகும். எனது மனுவில் எதிர்மனுதாரர் அவரது உறவினர் வீட்டிற்கு சென்றுவந்து என்னை தகாத வார்த்தையில் திட்டினார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த உறவினர் யார் என்ன உறவுமுறை என்று மனுவில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். திருமணத்தின் போது சீரவரிசையாக எத்தனை சவரன் தங்க நகை போட்டார்கள் என்றால் 5 பவுன் தங்க நகை போட்டார்கள். என்னென்ன நகை போட்டார்கள் என்றால் கம்மல், ஜிமிக்கி, மாட்டல், நெக்லஸ், மோதிரம் ஆகியவை போட்டார்கள். மனுவில் ஜிமிக்கி போட்டதாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மனுவில் மூன்றாவது பக்கத்தில் பாரா 9-ல் புஞ்சாத்தாரர்கள் முன்னிலையில் உள்ளது என்றால் சரிதான். புஞ்சாத்தாரர்கள் என்ன என்றால் எழுத்துப்பிழையாக உள்ளது. எதிர்மனுதாரர் வீட்டில் இருந்து நான் எந்த தேதியில் நான் வெளியேறி வந்தேன் என்றால் 16-ம் தேதி 1-ம் மாதம் வந்தேன். வருடம் சரியாக நினைவில் இல்லை. மனுவில் 15-ம் தேதி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பொங்கல் தினத்தன்று எதிர்மனுதாரர் என்னை அடித்து விரட்டிவிட்டார். எதிர்மனுதாரர் எவ்வளவு சம்பளம் வாங்குகிறார் என்றால் தெரியாது. மனுவிலும் எவ்வளவு சம்பளம் வாங்குகிறார் என்று தெரியாது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சுமாராக ரூ.10,000/- வரை சம்பளம் வாங்குவார்.

குறிப்பிட்டு எவ்வளவு வாங்குவார் என்று தெரியாது. எதிர்மனுதாரருக்கு சொந்த ஊர் என்ன என்றால் வாசுதேவநல்லூர், புளியங்குடியாகும். அங்கு எதிர்மனுதாரருக்கு சொந்தமான சொத்து உள்ளதா என்றால் உள்ளது. அது பற்றிய ஆவணங்கள் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு ராஜேஷ் என்ற பெயரில் அண்ணன், தம்பி உறவுமுறையில் யாராவது உள்ளார்களா என்றால் இல்லை. ராஜேஷ் என்ற பெயரில் வால்பாறை அண்ணாநகரில் யாரேனும் குடியிருக்கிறார்களா என்றால் நிறைய பேர் இருக்கிறார்கள். அவ்வாறு ராஜேஷ் என்பவர் குடியிருக்கும் வீட்டில் நானும் குடியிருக்கிறேனா என்றால் இல்லை. எனக்கு FaceBook, Instagram உள்ளதா என்றால் உள்ளது. அந்த Instagram -ல் என்னிடம் காட்டப்படும் புகைப்படம் உள்ளதா என்றால் தற்போது இல்லை. அந்த புகைப்படத்தில் I Love rajesh Sindhu என உள்ளது என்றால் சரிதான். ராஜேஷ் என்பவருடன் நான் சேர்ந்து வாழ்கிறேன் என்றால் சரியல்ல. நான் எனது அப்பா, அம்மாவுடன் இருந்து வருகிறேன். எனது மகள் காவ்யாஸ்ரீ கடந்த டிசம்பர் மாதம் அய்யப்பன் கோவில் சென்றாரா என்றால் சரிதான். நான் வீட்டை விட்டு செல்வதற்கு முந்தைய நாள் 14-ம் தேதி எனக்கும் எதிர்மனுதாரருக்கும் அடிதடி நடந்தது என்றால் சரிதான். எதிர்மனுதாரர் அது சம்பந்தமாக புகார் கொடுத்து காவல் நிலையத்தில் என்னை அழைத்து விசாரித்தார்கள் என்றால் சரிதான். அதற்கு பின்பு வண்டி எடுத்துவந்து வீட்டில் இருந்த எல்லா ஜாமான்களையும் நான் எடுத்து சென்றுவிட்டேன் என்றால் சரிதான். எதிர்மனுதாரர் நான் செய்த தவறுகளை மன்னித்து அவருடன் சேர்ந்து வாழ அழைத்து செல்ல தயாராக உள்ளார் என்றால் எனக்கு வாழ விருப்பம்இல்லை. குழந்தைகளை எதிர்மனுதாரரிடம் அனுப்ப தயாராக உள்ளேனா எ ன்றால் தயாராக உள்ளேன். நான் கண்ணன் ஏஜென்சிஸ்சில் வேலை செய்கிறேன் என்றால் பகுதிநேரமாக வேலை செய்கிறேன். எனக்கு வருமானம் வருதாலும், எதிர்மனுதாரோடு சேர்ந்து வாழ விருப்பம் இல்லை என்பதாலும் எதிர்மனுதாரரிடமிருந்து ஜீவனம்சம் பெறஎனக்குதகுதி இல்லை என்றால் சரியல்ல. எதிர்மனுதாரருடன் வயதான அவரது பெற்றோரும், பாட்டியும் இருக்கிறார்கள் என்றால் தெரியவில்லை. நான் கண்ணன் ஏஜென்சிலில் வேலை பார்த்து என்னை பராமரித்துக்கொள்ளும் அளவிற்கு போதுமான வருமானம் பெறுவதால் நான் எதிர்மனுதாரரிடம் ஜீவனசம் பெற தகுதியற்றவர் என்றால் சரியல்ல. மனு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:</u>** இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி. N.மீனாட்சி,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.